
தினமணி

**உளுந்து, பாசிப்பயிறு விவசாயிகள் கவனத்துக்கு...**

First Published : 07 Jul 2011 01:20:54 AM IST



கடலூர்: உளுந்து மற்றும் பாசிப்பயறு விவசாயிகளுக்கு வேளாண் துறை கீழ்காணும் தகவல்களை அளித்து உள்ளது.

பயறு வகைகளில் உளுந்தும் பாசிப்பயறும் முக்கிய இடம் வகிக்கிறது. பயறு வகைகளைப் பொருத்தவரை இந்தியா உலக அளவில் மிகப்பெரிய உற்பத்தியாளராகவும், நுகர்வோராகவும் உள்ளது. ஆனால் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் 2 முதல் 3 மில்லியன் டன் இடைவெளி உள்ளது. இந்தியா உள்நாட்டுப் பற்றாக் குறையை சமாளிக்க ஆண்டு தோறும் கணிசமான அளவில் பயறுவகைகளை இறக்குமதி செய்கிறது. 2010-11 ம் நிதிஆண்டில் முதல் 7 மாதங்களில் மட்டும் ரூ. 4,542.29 கோடி மதிப்பிலான 1.61 மில்லியன் டன் பயறு வகைகளை இறக்குமதி செய்து உள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இறக்குமதி, 54 சதம் குறைந்து உள்ளது.

2011-12 ம் ஆண்டில் பயறு வகைகள் உற்பத்தி 16.51 மில்லியன் டன்னாகவும், உள்நாட்டின் தேவை 19.11 மில்லியன் டன்னாகவும் இருக்கும் என்று வேளாண் அமைச்சகம் கணக்கிட்டு உள்ளது. எனவே தேவையைப் பூர்த்தி செய்ய 2012 மார்ச் 31 வரை வரியில்லா இறக்குமதிக்கு இந்திய அரசு அனுமதித்து உள்ளது. தமிழகத்தில் கடலூர், விழுப்புரம், நாகை, திருவாரூர், தஞ்சை, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் பயறுவகைகள் அதிகம் பயிரிடப் படுகிறது. தமிழகத்தில் 2009-10 ம் ஆண்டில் பயறு வகைகள் உற்பத்தி 2.04 லட்சம் டன்னாக (உளுந்து 0.99 லட்சம் டன், பாசிப்பயறு 0.48 லட்சம் டன்) இருந்தது.

2010-11 ம் ஆண்டில் பயறுவகைகள் உற்பத்தி அதிகரித்தது. எனவே உளுந்து பாசிப்பயறு விலைகள் தற்போது குறைந்து உள்ளன. அரசின் ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் நல்ல பருவநிலையே உற்பத்தி அதிகரிக்கக் காரணம். சென்ற ஆண்டு உளுந்து விலை கிலோ ரூ. 56 ஆக இருந்தது தற்போது ரூ. 48 ஆகவும் பாசிப் பயறு விலை ரூ. 38 ஆகவும் குறைந்து உள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்பு தகவல் மையம், விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கடந்த 10 ஆண்டுகளில்

நிலவிய விலைகளை, ஆராய்ந்து ஜூன், ஜூலை மாதங்களில், உளுந்து மற்றும் பாசிப்பயறு விலைகள் எவ்வாறு இருக்கும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தது. உளுந்து விலை கிலோ ரூ. 46 முதல் ரூ. 48 வரை, பாசிப் பயறு கிலோ ரூ.41 முதல் ரூ. 42 வரையிலும் இருக்கும் எனக் கணித்து உள்ளது.

எனவே தமிழகத்தில் பயறு வகைகள் விலையேற்றத்துக்கான வாய்ப்பு இருக்காது என்றும், உளுந்து மற்றும் பாசிப் பயறு இருப்பு வைத்து இருப்பவர்கள் அவற்றை விற்றுவிடலாம் என்றும் விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை தெரிவித்து உள்ளது.

**ஒருங்கிணைந்த கரும்பு பயிர் பாதுகாப்பு முறைகள்**

First Published : 07 Jul 2011 01:19:57 AM IST



திருவள்ளூர்: கரும்பு பயிரிடும் விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மூலம் முறையாக பயிரை பராமரித்தால் நல்ல லாபமடையலாம் என வேளாண்துறை அலுவலர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக துளைப்பான்கள் வகை பூச்சிக்களாக இளங்குருத்துப் புழு, இடைக்கணுப் புழு, நுனிக் குருத்துப் புழு, வேர்த்துளைப்பான் ஆகியவை கரும்புக்கு எதிரியானவை. மேலும் பைரில்லா இலை தத்துப்பூச்சி, செதில் பூச்சி, வெள்ளை ஈ, மாவுப்பூச்சிகள் ஆகியவை சாறு உண்ணும் பூச்சி வகைகள் மற்றும் வேர் பகுதியில் வாழும் பூச்சிக்களான கரையான் மற்றும் வெள்ளை வேர்ப்புழு ஆகியவை கரும்பு பயிரை சேதப்படுத்தி விவசாயிகளை நஷ்டமடையச் செய்யும்.

ஒருங்கிணைந்த பூச்சி தடுப்பு முறை: பூச்சி நோய் தாக்காத காரணைகளை தேர்வு செய்ய வேண்டும். ஆழ உழவு செய்து கரையான் வேர்ப் புழுக்களை வெளிக் கொண்டு வரவேண்டும். குருத்துப்புழுவின் தொல்லை குறைய கரும்பு பயிரை முன் பட்டத்தில் நடவேண்டும். (குறிப்பாக டிசம்பர், ஜனவரி மாதத்தில் நடவேண்டும்). கரும்பின் காய்ந்த தோகைகளை 3-ல் இருந்து 5 நாள்களில் பார்களின் மேல் பரப்பில் பரப்புவதன் மூலம் குருத்துப் புழுவின் தொல்லை குறையும்.

உளுந்து, பச்சை பயறு, சோயா போன்ற ஊடுபயிர்கள் கரும்பில் குருத்துப் புழுவின் தொல்லைகளை குறைக்கும். மண்ணின் ஈரம் தொடர்ச்சியாக இருக்கும் வண்ணம் நீர் பாய்ச்சுவதன் மூலமும் குருத்துப்புழுவின் பாதிப்பு குறையும். பயிர் நடப்பட்டு 40 முதல் 65 நாள்கள் வரை குருத்துப் புழு தாக்கும் பகுதிகளில் கரும்பின் கீழ்த்தண்டு இரண்டரை அங்குலம் மறையுமாறு மண் அணைக்க வேண்டும். கரும்பின் காய்ந்த சருகுகளை 5-ல் இருந்து 7 மாதங்களில் உரித்து விடுவதால் இடைக்கணு புழு, செதில்மீன் பூச்சி, வெள்ளை ஈ, மாவுப் பூச்சி ஆகியவற்றின் தாக்குதல் குறையும். உரம், நீர் நிர்வாகம் ஆகியவற்றை சீரிய முறையில் கையாள வேண்டும். இதே முறையில் பராமரித்தால் வெள்ளை ஈ, பைரில்லா சத்துப் பூச்சிகளின தாக்குதல்களும் குறையும்.

உயிரியல் தடுப்பு முறைகள்: இளங்குருத்துப் புழுவை கட்டுப்படுத்த, கிரானுலோசில் வைரஸ் கிருமிகளை உபயோகிக்க வேண்டும். (அ) 120 லிட்டர் மியாப்சிஸ் இன்பரஸ் ஒட்டுண்ணி விடவேண்டும். இடைக்கணுப்புழுவை கட்டுப்படுத்த டிரைக்கோகிரமா கையோனிஸ் குளவி முட்டை ஒட்டுண்ணி விடவேண்டும். பைரில்லா பூச்சி வகை தடுப்பு, எப்ரிக்கேனியா மேலானோலுக்கா ஒட்டுண்ணி விடவேண்டும். நுனி குருத்துப்புழுவைத் தடுக்க, ஐசோடிமா ஜவான்சிஸ் ஸ்டோனாபிரகான் புழு ஒட்டுண்ணிகள் விடவேண்டும்.

பூச்சிக் கொல்லி மருந்து: பொருளாதார சேதநிலைக்கு மேல் தாக்குதல் தென்பட்டால் பூச்சிக் கொல்லி மருந்தை தெளிக்கலாம். இளங்குருத்துப் புழுவை தடுக்க ஒரு ஏக்கருக்கு எண்டோசல்பான் 500 மில்லி (அல்லது) 10 கிலோ பியூரடான் இடவேண்டும்.

சாறு உண்ணும் பூச்சிகளைத் தடுக்க காய்ந்த சறுகுகளை களைந்த பின்னர் ஒரு ஏக்கருக்கு எண்டோசல்பான் 500 மில்லி அல்லது மாலத்தியான் ஒரு லிட்டர் தெளிக்க வேண்டும்.

இனக்கவர்ச்சிப் பொறி: இளங்குருத்துப் புழு இடைக்கணுப்புழு, தட்டுப் புழு போன்றவற்றை இனக்கவர்ச்சிப் பொறி வைத்து தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கும் முறைகளையும் கையாளலாம். மேற்கண்ட வழிமுறைகளை விவசாயிகள் பின்பற்றினால் கரும்பு பயிரை பூச்சிகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்து அதிக லாபம் பெறலாம் என வேளாண்துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

**பயிர்களுக்கு உரம் இடுவதில் புதிய முறை**

First Published : 07 Jul 2011 01:18:35 AM IST



புதுச்சேரி: பயிர்களுக்கு உரம் இடுவதில் புதிய முறை ஒன்றை புதுச்சேரி கூடப்பாக்கத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயியும், கனகாம்பரத்தில் புதிய ரகங்களை உருவாக்கியவருமான வெங்கடபதி ரெட்டியார் கண்டறிந்துள்ளார்.

÷உரம் திட வடிவத்தில் கிடைக்கிறது. இந்த உரத்தைத் தயாரிக்கப் பயன்படும் அமில கரைசலை நேரடியாகப் பயிர்களுக்குப் பயன்படுத்த முடியும். இப்படி செய்வதால் செலவு குறைகிறது. மகசூல் அதிகரிக்கிறது என்கிறார். இதைத் தவிர மார்கெட்டில் உள்ள உரங்கள் பொதுவான மூலக்கூறுகளைக் கொண்ட உரங்களாக இருக்கின்றன.

அப்படி இருக்கக் கூடாது. ஒவ்வொரு பயிருக்கும் ஏற்ற வகையில் உரம் இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் குறிப்பிட்ட ஒரு தாவரத்துக்கு ஏற்ற வகையில் உரம் இருக்க வேண்டும் என்று இவர் சொல்கிறார்.

÷அந்த அடிப்படையில் உரம் தயாரிக்கப் பயன்படும் அமிலங்களை குறிப்பிட்ட அளவில் சவுக்கு உள்ளிட்ட பயிர்களுக்கு அவர் கொடுத்து பரிசோதனை செய்துள்ளார். இப் பரிசோதனை சாதனையாகவே மாறியிருக்கிறது. அதை அவர் நம்மிடம் இப்படி பகிர்ந்து கொள்கிறார்:-

÷விவசாயத்தில் வாழை, மிளகாய், கத்தரி, வெண்டை, மரவள்ளி, மலர் சாகுபடி போன்ற பயிர்களுக்குத் தேவையான தனித்தனியான மணிசத்து கொண்ட உரங்கள் மார்க்கெட்டில் இல்லை. இதுபோன்று தனித்தனியாக சத்துள்ள உரங்கள் இருந்தால்தான் வேர்கள் அதிக அளவில் பரவி மண்ணில் உள்ள சத்துகளைக் கிரகிக்க முடியும். இல்லையென்றால் மகசூல் குறையும்.

÷நைட்ரஜன்- பாஸ்பரஸ்- பொட்டாசியம் கலந்த உரங்கள் மார்க்கெட்டில் கிடைக்கின்றன. இந்த உரத்தை மண்ணில் இடும்போது ரசாயன மாற்றம் நிகழ்ந்து சல்பெட்டாக மாறும். அதைத் தாவரங்கள் எடுத்துக் கொள்ளும். இந்த உரத்தில் நாம் இடும் தழைச்சத்து பயிர்களுக்கு முழுமையாகக் கிடைப்பது இல்லை.

÷மார்க்கெட்டில் கிடைக்கும் உரங்களில் மணிசத்துக்கான உரம் தயாரிக்கும் மூலப்பொருளாக ஆர்த்தோ பாஸ்பரிக் அமிலம் பயன்படுகிறது. இந்த பாஸ்பரிக் அமிலம் திரவ வடிவத்தில் கிடைக்கிறது.

இந்தத் திரவத்தைத் தாவரத்துக்கு ஏற்றபடி சதவீதத்தைக் கணக்கிட்டு குறைத்தும், கூட்டியும் தண்ணீருடன் கலந்து செடிகளின் வேர் பகுதி அருகே ஊற்றலாம். இதனால் தாவரங்களுக்குத் தேவையான சத்து அதிக அளவில் கிடைக்கும். இதனால் தாவரங்கள் ஆரோக்கியமாக வளரும். நிர்ணயித்த இலக்கு மகசூலை எட்ட முடியும்.

÷சோதனைக்காக சவுக்கு, வாழைப் பயிர்களில் பரிசோதனை செய்து பார்த்தேன். நல்ல மகசூல் கிடைத்தது. ரங்கசாமி என்ற புதிய சவுக்கு ரகத்தை நான் உருவாக்கி இருக்கிறேன். அந்த ரகத்துக்கு பல விகிதங்களில் ஆர்த்தோ பாஸ்பரிக் அமிலம்

கொடுத்துப் பார்த்ததில் வேர்கள் அதிக அளவில் உற்பத்தியாகி ஆரோக்கியமான வளர்ச்சி இருந்தது. மேலும் நிர்ணயித்த இலக்கைக் காட்டிலும் ஒரு மரத்தின் எடை அதிகரித்தது. இந்த அமிலத்தைப் பயன்படுத்தி தாவரங்களுக்கு ஏற்றாற்போல் அதிகரித்து சோதனை செய்தேன். சவுக்கையில் இது போன்ற உரத்தைப் பயன்படுத்தாமல் மார்க்கெட்டில் கிடைக்கும் உரத்தைப் பயன்படுத்தி பார்த்ததில் வேர்கள் மிக குறைவாகவும், வேர்கள் நோயினால் பாதித்து இருப்பதையும் அறிந்தேன்.

÷ஆர்த்தோ பாஸ்பரிக் அமிலத்தைப் பயன்படுத்தி வளர்க்கப்படும் தாவரங்களின் வேர்கள் ஆழமாகச் செல்வதால் நன்கு வறட்சியிலும் செழித்து வளருகின்றன. மேலும் புயல், மழை காலங்களிலும் சாய்வதில்லை. மேலும் இந்த அமிலம் நோய் தடுப்பு மருந்தாகவும் செயல்படுகிறது.

அதே போன்று வாழையில் இந்த அமிலத்தைக் கூடுதலான அளவு சதவிகிதம் தண்ணீரில் கலந்து வேர் பகுதி அருகே ஊற்றியதால் அதிக வேர்கள் உருவாகி செழிப்பாக வளர்ந்தன. ஆரோக்கியமாக இருக்கின்றன.

÷பயிர்களுக்குத் தகுந்த மாதிரி சொட்டு நீர் பாசனம் மூலம் இப்படி திரவ உரங்களைப் பயன்படுத்தினால் மகசூல் இலக்கில் 30 சதம் அதிகரிக்கலாம்.

விளைநிலங்கள் குறைந்து வரும் இந்தக் காலக்கட்டத்தில் குறைந்த இடத்தில் அதிக மகசூல் எடுக்க இந்த முறைதான் சிறந்தது. இதனால் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

÷எந்த விகிதத்தில் திரவ உரத்தை அளிக்க வேண்டும் என்று வேளாண் நிபுணர்களிடம் கேட்டறிந்து இட வேண்டும். இல்லையென்றால் அதிகமாக உரத்தை அளித்தால் அந்தத் தாவரம் இறக்கவும் அதிக வாய்ப்பு இருக்கிறது. நன்கு தெரிந்து கொண்டப் பிறகு பின்பற்றினால் நல்ல பலன் கிடைக்கும்.

**கலப்பின வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி**

First Published : 06 Jul 2011 12:29:19 PM IST

நாமக்கல், ஜூலை 5: நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் கலப்பின வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்படுகிறது.

இதில் கலப்பின வெள்ளாடு இனங்களை தேர்வு செய்யும் முறை, கொட்டகை அமைக்கும் முறைகள், பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் தயாரிக்கும் முறைகள், தீவன மேலாண்மை, நல மேலாண்மை, நோய் கட்டுப்படுத்தும் முறைகள், விற்பனைக்கான வாய்ப்பு ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படும். விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுள்ளோர் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தை நேரில் அணுகலாம். தொடர்புக்கு: 04286-266345, 266244, 266650.

**விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து வழங்க ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு**

First Published : 06 Jul 2011 12:05:32 PM IST

புதுச்சேரி, ஜூலை 5: விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட பொருள்கள் வாங்கிக் கொடுக்க ரூ.3 கோடி நிதியை புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி தனியாக ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

÷இது குறித்து வேளாண்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியது: புதுச்சேரியில் விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட பொருள்களை அரசின் பாசிக் நிறுவனம்தான் வாங்கி மானிய விலையில் விவசாயிகளுக்குக் கொடுத்து வந்தது. இந்த நிறுவனத்துக்கு கொடுக்கப்படும் அரசின் நிதியை வேறு காரியத்துக்காகப் பயன்படுத்தி விடுகின்றனர்.

இங்கு பணியாற்றும் ஊழியர்களுக்குக் கடந்த சில மாதங்களாக சம்பளமும் கொடுக்கப்படவில்லை. இந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்குகிறது. அதனால் அரசு கொடுக்கும் நிதியை சம்பளம் போன்றவற்றுக்கு பயன்படுத்தி விடுகின்றனர்.

இப்படி எந்த வகையிலும் நிதியை மாற்றக் கூடாது. விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட பொருள்களை வாங்கிக் கொடுக்க மட்டும்தான் இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இப்போது பாசிக் நிறுவனத்துக்கு ரூ.3 கோடி நிதியை சுழல்நிதியாக இந்த நிறுவனத்துக்குக் கொடுக்க முதல்வர் ரங்கசாமி நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கான அரசாணை ஓரிரு நாளில் வெளியாகும். விரைவில் இந்த ரூ.3 கோடி பாசிக் நிறுவனத்துக்கு வழங்கப்
படும்.

வேளாண்துறைக்கு இடைக்கால பட்ஜெட்டில் ரூ.24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ரூ.3 கோடி வழங்கப்படுகிறது. இப்போது விவசாயிகளுக்கு உடனடித் தேவையாக விதை, உரம் தேவைப்படுகிறது. இதை இந்த நிறுவனம் விரைவில் விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுக்கும் என்று அந்த அதிகாரி கூறினார்.

**தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு விற்பனை: பணம் கிடைக்காமல் விவசாயிகள் அவதி**

First Published : 06 Jul 2011 04:18:09 AM IST



தஞ்சாவூர்: அரைவைப் பருவம் முடிந்தும், கொள்முதல் செய்யப்பட்ட கரும்புகளுக்கு இரு சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் இதுவரை பணம் பட்டுவாடா செய்யாமல் விவசாயிகளை அலைக்கழித்து வருகின்றன.

மத்திய அரசின் கரும்பு கட்டுப்பாட்டு ஆணைப்படி, வயலில் இருந்து ஆலைகளுக்கு கரும்பு அனுப்பியதிலிருந்து 15 நாள்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட வேண்டும். ஆனால், ஏப்ரல் 15-ம் தேதிக்கு பிறகு அரைவைக்கு எடுக்கப்பட்ட கரும்புகளுக்கு இதுவரை விவசாயிகளுக்கு பணம் வழங்கப்படவில்லை.

கரும்பு கொள்முதல் செய்து இரண்டு மாதங்களாகியும் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாத திருமண்டலக்குடி, துகிலி கோட்டூரிலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளில் ஜூன் 20-ம் தேதியோடு அரைவைப் பருவமே முடிந்துவிட்டது.

இந்த இரண்டு ஆலைகளுக்கும் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கரும்பு சாகுபடி பரப்பளவு உள்ளது. அதனால், கரும்புக்கான கொள்முதல் பணம் கிடைக்காமல், இந்த மாவட்டங்களில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமே சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் தொகையை பட்டுவாடா செய்கின்றன.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அனைத்து கரும்பு விவசாயிகளும் ஏக்கருக்கு ரூ. 22,500 கடன் பெற்றுத்தான் சாகுபடி செய்துள்ளனர்.

இந்தக் கடன் தொகையை திரும்பச் செலுத்தாததால், விவசாயிகளுக்கு மீண்டும் கடன் அளிக்க இந்த வங்கிகள் மறுத்துவிட்டன. இதனால், பல விவசாயிகளின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி உள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இங்குதான் 70 முதல் 75 சதம் விவசாயிகள் கடன் பெற்றுள்ளனர்.

இந்த ஆலைகளில் தினமும் 2,000 டன் வீதம் கடந்த இரண்டு மாதங்களில் 1.20 லட்சம் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அரசின் ஆதார விலையான டன் ஒன்றுக்கு ரூ. 1900 கணக்கின்படி சுமார் ரூ. 20 கோடி வரை விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டியுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டு விவாதிக்க தனியாக குறைதீர் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதும் விவசாயிகளின் விருப்பமாக உள்ளது. இதுதொடர்பாக தஞ்சை மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் கூறியது:

பணம் பட்டுவாடா செய்யாதது குறித்து விவசாயிகள் புகார் தெரிவித்தனர். உடனடியாக இரண்டு சர்க்கரை ஆலை நிர்வாகங்களிடமும் அறிக்கை அளிக்க உத்தரவிட்டுள்ளேன். ஜூன் 30-ம் தேதி பணம் பட்டுவாடா செய்வதாக ஆலைகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இனியும் தாமதிக்காமல் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய ஆலைகளுக்கு மீண்டும் அறிவுறுத்தப்படும். கரும்பு விவசாயிகளுக்கு தனியாக குறைதீர் கூட்டம் நடத்துவது குறித்து ஆலோசித்து வருகிறோம் என்றார் பாஸ்கரன்.

**பயறு உற்பத்தி திட்ட விவசாயிகள் கூட்டம்**

First Published : 06 Jul 2011 03:56:35 PM IST

செய்யாறு, ஜூலை 5: செய்யாறு அடுத்த பாராசூர் கிராமத்தில் விரைவுபடுத்தப்பட்ட பயறு உற்பத்தி திட்ட விவசாயிகள் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கலந்துகொண்டு இத் திட்டம் குறித்து விளக்கினார். அப்போது விவசாயிகளுக்கு விரைவில் விதை நேர்த்தி மருந்து வழங்கப்படவுள்ளது என்றார்.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் உளுந்து விதைகளும், உயிர் உரப் பெட்டலங்கள் இலவசமாகவும் வழங்கப்பட்டது. அனைத்து விவசாயி நிலங்களிலும் மண் ஆய்வு செய்யும் பொருட்டு உதவி அலுவலர்கள் மண்மாதிரிகளை சேகரித்தனர்.

ஊராட்சித் தலைவர் அருள்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.பெருமாள், கிராம நிர்வாக அலுவலர் சி.எஸ்.அமுதா, முன்னோடி விவசாயி தசரதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்ட ஏற்பாடுகளை உதவி அலுவலர் சங்கர், கருணாநிதி ஆகியோர் செய்திருந்தனர்.

**வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை**

First Published : 06 Jul 2011 03:49:43 PM IST

மன்னார்குடி, ஜூலை 5: மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகம் என்பதை வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகம் எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண்மைக்கு என தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என அகில இந்திய விவசாயிகள் சங்கம் (இந்திய கம்யூனிஸ்ட் சார்பு) வலியுறுத்தியுள்ளது.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் வைர விழாவை முன்னிட்டு, மன்னார்குடி தேரடித் திடலில் செவ்வாய்க்கிழமை பொதுக் கூட்டமும், வாகனப் பேரணியும் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

காவிரி நீர் பிரச்னையில் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டு, அமல்படுத்திட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இதைக் கண்காணிக்க காவிரி ஒழுங்குமுறை ஆணையம், காவிரி கண்காணிப்பு கமிட்டி ஆகியவற்றை அமைக்க வேண்டும். மேலும், தென்னக நதிகள் இணைப்பு, தமிழக நதிகள் இணைப்பு ஆகியவற்றை விரைவுபடுத்த வேண்டும்.

ரசாயன உரம், இடுபொருள்கள், பெட்ரோலியப் பொருள்கள் விலை நிர்ணயத்தை மத்திய அரசே மேற்கொண்டு, விலை உயர்வைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். மேலும், ஆலைகளுக்கு கொடுக்கும் ரசாயன உரத்திற்கான மானியத்தை அரசே நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்

தமிழகத்தில் உள்ள சிற்றணைகள் அனைத்தையும் சீரமைத்து, நீர்வளப் பாதுகாப்பை மேம்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்வதுடன், ஆறுகளில் அளவுக்கு அதிகமாகவும், முறைகேடாகவும் மணல் அள்ளுவதை தடை செய்ய வேண்டும்.

தமிழகத்தில் விவசாயப் பணிக்கு தடையின்றி தினமும் 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். தமிழ்நாடு வேளாண் மன்றச் சட்டம்-2000-ஐ ரத்து செய்ய வேண்டும்.

தேசிய விவசாய ஆணையத்தின் பரிந்துரையின்படி, விளைவிக்கும் பொருள்களுக்கு உற்பத்திச் செலவுடன் 50 சத தொகையைச் சேர்த்து விலை நிர்ணயிக்க வேண்டும். இந்தத் திட்டத்தை அமல்படுத்தும் வரை, நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 1500-ம், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 8.5 சர்க்கரை பிழிதிறன் உள்ளதற்கு ரூ. 2500-ம் வழங்க வேண்டும். விளைவிக்கும் பொருள்களை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும். உரித்த தேங்காய்களை அரசே கொள்முதல்

செய்து தேங்காய் ஒன்றுக்கு ஏழு ரூபாயும், கொப்பரை கிலோவுக்கு ரூ. 60 என்றும் விலை நிர்ணயம் செய்து, நிபந்தனை இல்லாது தென்னை மரங்களை காப்பீடு செய்ய வேண்டும்.

வேளாண்மையில் மரபணு மாற்றுத் தொழில்நுட்பத்தை தடை செய்ய வேண்டும். வீணாகும் உணவு தானியங்களை சேமித்திட குளிரூட்டப்பட்ட சேமிப்பு, பாதுகாப்புக் கிடங்குகள் அமைத்திடவும், மரபு சார்ந்த நிலையில் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் பெற்றிட தேசிய வேளாண்மை ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்தவும் தேவையான நிதியை மத்திய அரசு ஒதுக்க வேண்டும்.

60 வயதைக் கடந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு முதியோர் ஓய்வு ஊதியமாக ரூ. 2000 வழங்க வேண்டும்.

காட்டு விலங்கு பட்டியலிலிருந்து காட்டுப் பன்றியை நீக்கி, மலைப் பகுதி விவசாயிகளை வன விலங்குகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டும். வன விலங்குகளால் உயிரிழக்கும் விவசாய குடும்பத்திற்கு ரூ. 2 லட்சமும், சேதத்திற்கு ஏற்ப விளை நிலங்களுக்கு இழப்பீடும் வழங்க வேண்டும்.

விளைநிலங்களை வேறு பயன்பாட்டிற்கு கையகப்படுத்துவதை தடுக்க மாற்றுச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். விதை சட்ட மசோதா-2010-ஐ கைவிட வேண்டும். இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்தவும், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை அதிகரிக்கவும் மத்திய, மாநில அரசுகள் பிரசாரம் மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டச் செயலர் பி.எஸ். மாசிலாமணி தலைமை வகித்தார். சங்கத்தின் அகில இந்தியத் துணைத் தலைவர் நாகேஸ்வரராவ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு, இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார், சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ். குணசேகரன் எம்எல்ஏ, மாநிலச் செயலர் வே. துரைமாணிக்கம் உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக, தென்பரை கிராமத்திலிருந்து தியாகச் சுடர் ஏந்தி விவசாயிகள் சங்கத்தினர் வாகனப் பேரணியாக பல்வேறு கிராமங்களின் வழியாக ஊர்வலமாக வந்து, மன்னார்குடி தேரடி திடலில் நடைபெற்ற பொதுக் கூட்ட மேடைக்கு வந்தனர்.

தினமலர்

## மத்திய அரசின் புதிய உரக்கொள்கையால் டீ.ஏ.பி., விலை உயர்ந்தது

ஜூலை 07,2011,00:18



கடலூர்: மத்திய அரசின் புதிய உரக்கொள்கையால் டீ.ஏ.பி., விலை திடீரென உயர்ந்துள்ளது. மத்திய அரசு, இதுவரை உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு, நேரடியாக மானியம் வழங்கி வந்தது. தற்போது நுண்ணூட்ட சத்துக்கள் அடிப்படையில், மத்திய அரசு மானிய உதவி வழங்குகிறது. இதனால், உரத் தயாரிப்பு நிறுவனங்கள் விருப்பம் போல் விலையை நிர்ணயித்து கொள்ளலாம் என அறிவித்தது. அதன்படி ஸ்பிக், ஆர்..சி. எப்., ஐ.பி.எல்., போன்ற உர நிறுவனங்கள், உரம் தயாரிப்பது மட்டுமல்லாமல், ஜோர்டான் நாட்டில் இருந்து உரத்தை இறக்குமதி செய்து, இந்தியாவில் டீலர்களுக்கு அனுப்பி வந்தன. இதற்கும் மத்திய அரசு மானியம் அளித்தது. இருப்பினும் யூரியா மட்டும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதனால், ஒரு மூட்டை யூரியா 276 ரூபாயாக உள்ளது. தற்போது யூரியாவின் விலையில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், அடியுரமாக பயன்படுத்தும் டீ.ஏ.பி., மற்றும் பொட்டாஷ், அமோனியம் குளோரைடு உள்ளிட்ட உரங்கள், அந்தந்த உர நிறுவனங்களே விலை நிர்ணயித்து விற்பனை செய்து வருகின்றன. தற்போது தமிழகத்தில் குறுவை பட்டத்தில், 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல்லும், ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் (3 மாதம் வளர்ந்த) கரும்பும் பயிர் செய்யப்பட்டுள்ளது. மேலும், கீழணையில் முன்கூட்டியே தண்ணீர் திறந்ததால் முன்பருவ சம்பா நடவு செய்யவும் விவசாயிகள் தயாராகி வருகின்றனர். இதனால், அடி உரமாக பயன்படுத்தக் கூடிய டீ.ஏ.பி., உரத்தேவை 8,000 டன்னாக அதிகரித்துள்ளது. ஆனால், கடலூர் மாவட்டத்தில், 4,000 டன் மட்டுமே உரம் இருப்பு உள்ளது. தேவைக்கேற்ப உரம் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், உர நிறுவனங்கள் தமது இஷ்டம் போல் விலையை உயர்த்தி வருகின்றன. இதுவரை ஒரு மூட்டை 517 ரூபாயாக இருந்த டீ.ஏ.பி., ஏப்ரல் மாதத்திற்கு பின் 630 ரூபாயாக உயர்ந்துள்ளது. அதுவும் கொரமண்டல் டீ.ஏ. பி., மட்டுமே மார்க்கெட்டில் கிடைத்து வருகிறது.

பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் உரம் இருப்பு இல்லை. இதனால், விவசாயிகளுக்கு தகுந்த நேரத்தில் உரம் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

**கோதுமை கொள்முதல் 2.80 கோடி டன்னை எட்டி சாதனை**

ஜூலை 07,2011,00:17



புதுடில்லி: நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், இந்திய உணவுக் கழகம் மற்றும் மாநில அரசகளின் ஏஜன்சிகள், சாதனை அளவாக 2.78 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளன. எந்த ஆண்டிலும் இல்லாத அளவாக, கோதுமை, நெல் ஆகிய உணவு தானியங்களின் கையிருப்பு, மும்மடங்கு உயர்ந்துள்ளதால், இவற்றை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பது குறித்து மத்திய அரச பரிசீலித்து வருகிறது. மத்திய அரச ஆண்டுதோறும் அறுவடை காலம் முடிவடைந்ததும், பொது வினியோகத்திற்காக, விவசாயிகளிடம் இருந்து உணவு தானியங்களை கொள்முதல் செய்வது வழக்கம். இந்திய உணவுக் கழகம் மற்றும் மாநில அரசகளின் ஏஜன்சிகள் மூலம் கொள்முதல் செய்யப்

படும் உணவு தானியங்கள் பின்பு வினியோகிக்கப்படுகிறது. இதன்படி, 2006-07ல், 92.30 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டது. இது, 2007-08ல், 1.12 கோடி டன்னாகவும், 2008-09ல், 2.27 டன் என்ற அளவிலும் உயர்ந்தது. 2009-10ம் ஆண்டு கோதுமை கொள்முதல் 2.53 கோடி டன்னாகவும், 2010-11ம் ஆண்டு, 2.24 கோடி டன் என்ற அளவிலும் இருந்தது. நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில் (2011-12), 2.60 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரையிலுமாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி, 2.78 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சந்தைப்படுத்தும் பருவம் முடிவடைந்துள்ள நிலையில், தற்போது பீகார் மாநிலத்தில் இருந்து மட்டும் சிறியளவில் கோதுமை கொள்முதல் செய்யப்பட உள்ளது. சென்ற ரபி பருவத்தில் கோதுமை விளைச்சல் சாதனை அளவாக 8.20 கோடி டன் என்ற அளவை எட்டியது. பஞ்சாபில் கோதுமை உற்பத்தி 1.01 கோடி

டன்னில் இருந்து, 1.09 கோடி டன் என்ற அளவை எட்டியது. இதே போன்று, அரியானா மாநிலத்தின் கோதுமை உற்பத்தி, 63 லட்சம் டன்னில் இருந்து 68 லட்சம் டன்னாக உயர்ந்தது. உத்தர பிரதேச மாநிலத்தின் கோதுமை உற்பத்தி 16.60 லட்சம் டன் என்ற அளவில் இருந்து 33.40 லட்சம் டன்னாக அதிகரித்தது. ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களின் கோதுமை உற்பத்தி முறையே 12.70 லட்சம் டன் (47.50 லட்சம் டன்) மற்றும் 48.90 லட்சம் டன் (35.30 லட்சம் டன்) என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. மத்திய அரச, பொது வினியோகத்திற்கு வழங்கியது போக, 2.12 கோடி டன் அளவிற்கு உணவு தானியங்களை இருப்பு வைக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. ஆனால், தற்போது தானிய கையிருப்பு, மும்மடங்கிற்கும் அதிகமாக, அதாவது 6.54 கோடி டன் அளவிற்கு உள்ளது. இதனால், நடப்பு கரீப் பருவ விவசாயத்தை ஊக்குவிக்கவும், உள்நாட்டில் உணவு தானியங்கள் விலையை கட்டுக்குள் வைக்கவும், கோதுமை, நெல் ஏற்றுமதியை மேற்கொள்வது குறித்து மத்திய அரச பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகில் கோதுமை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. 2007ம் ஆண்டு கோதுமை உற்பத்தி பாதிக்கப்பட்டதால், விலை உயர்ந்தது. இதை கட்டுப்படுத்தும் நோக்கில், கோதுமை இறக்குமதி செய்யப்பட்டது. மேலும், கோதுமை ஏற்றுமதிக்கும் தடை விதிக்கப்பட்டது. மத்திய அரச தற்போது, ஒரு குவிண்டால் கோதுமைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக 1,120 ரூபாயும், ஊக்கத் தொகையாக 50 ரூபாயும் வழங்கி வருகிறது.

**உரம், விதை தட்டுப்பாடு இல்லை: அமைச்சர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2011,00:00 IST

திருவண்ணாமலை: ""விவசாயத்துக்கு தேவையான உரம், விதை தட்டுபாடில்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது," என, அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கூறினார். திருவண்ணாமலையில் உழவர் தியாகிகள் தினத்தை முன்னிட்டு விவசாயிகள் மாநாடு தமிழக விவசாயிகள் சங்கம் மற்றும் இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி சார்பில் நடந்தது. மாநில தலைவர் வேட்டவலம் மணிகண்டன் தலைமை வகித்தார். அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு தமிழக முதல்வர் ஜெயலலிதா கொடுத்தனுப்பிய வாழ்த்து செய்தியை மாநில தலைவர் வேட்டவலம் மணிகண்டனிடம் கொடுத்தார். பின் அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேசியதாவது: விவசாயிகளின் நலன் பெற தமிழக முதல்வர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன் விளைவாக தற்போது, தமிழகத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரம், விதை தட்டுப்பாடு இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான மின்

தடையை படிப்படியாக போக்கப்பட்டு வருகிறது. விரைவில் மின்சார பற்றாக்குறை இல்லாத மாநிலமாக உருவாக்க முதல்வர் நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த மாநாட்டில் வைக்கப்பட்ட கோரிக்கைகளான நந்தன்கால்வாயை சீரமைப்பு, நூறு நாள் வேலை திட்டத்தில் ஏரி, ஆறு, ஓடை கால்வாய்கள் தூர் வாரப்பட வேண்டும், கரும்பு விலை டன் ஒன்றுக்கு, 2, 500 ரூபாய் வழங்க வேண்டும், தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை தமிழக முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

**தியாகதுருகம் பகுதியில் கனமழை: கம்பு விதைப்பு பணிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2011,00:17 IST

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் கன மழை பெய்ததை தொடர்ந்து கம்பு விதைப்பு பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தியாகதுருகம் பகுதியில் ஆண்டுதோறும் மானாவாரியில் கம்பு சாகுபடி செய்து விவசாயிகள் லாபம் ஈட்டி வருகின்றனர். கடந்த ஆண்டு தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கம்பு சாகுபடி செய்து பலனடைந்தனர். உடலில் கொழுப்பு சத்தை குறைக்கும் சிறந்த உணவாக கம்பு இருப்பதால் சமீப காலமாக கம்பு உணவை சாப்பிடுவதில் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். சாலையோரங்களில் கம்பு கூழ் கடைகளில் கூட்டம் அலைமோதுவதை காண முடிகிறது. அதேபோல் கோழி, மாட்டு தீவனங்களுக்கும் கம்பு அதிகளவில் தேவைப்படுவதால் இதற்கு நல்ல விலை கிடைக்கிறது. மானாவாரியில் அதிக செலவின்றி நல்ல லாபம் ஈட்டித்தரும் பயிராக கம்பு இருப்பதால் விவசாயிகள் இதனை ஆர்வமுடன் சாகுபடி செய்து வருகின்றனர்.

இவ்வாண்டு மே மாதத்தில் பெய்த கனமழையை பயன்படுத்தி நிலத்தை உழுது களைகளை அழித்து நிலத்தை பண்படுத்தி வைத்திருந்தனர். தென்மேற்கு பருவமழை பெய்வதில் தாமதம் ஆனதால் குறித்த நேரத்தில் விதைப்பு பணிகளை மேற்கொள்ளமுடியாமல் விவசாயிகள் கவலையில் இருந்தனர். கடந்த சில தினங்களாக இப்பகுதியில் இரவில் கனமழை பெய்து வருகிறது. இதனால் மானாவாரி நிலங்களில் நீர் தேங்கும் அளவுக்கு ஈரப்பதம் அதிகரித்தது. இதை பயன்படுத்தி விவசாயிகள் கம்பு விதைப்பு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் நுண்ணுயிர் உரங்கள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2011,00:16 IST

விழுப்புரம் : வேளாண்மை விரிவாக்க மையங்களில் நுண்ணுயிர் உரங்கள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. இது குறித்து ஒலக்கூர் வேளாண்மை உதவி இயக் குனர் ராஜசேகர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

ஆடிப்பட்ட மானாவாரி மணிலா சாகுபடிக்கு அதிக விளைச்சல் கொடுக்கக் கூடிய டி.எம்.வி 2 மற்றும் டி.எம்.வி 7 ரக விதைகளை விதைக்கலாம். அடிஉரமாக ஊட்டமேற்றிய தொழு உரம் ஏக்கருக்கு 300 கிலோ இட வேண்டும். ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் அடியுரமாகவும், விதைத்த 45ம் நாள் இரண்டாம் களை எடுக்கும் போது 80 கிலோ ஜிப்சம் மேலுரமாக இட்டு மண் அணைக்க வேண்டும். நுண்ணுயிர் உரங்களான பாஸ்போ பேக்டிரியா 800 கிராம், ரைசோபியம் 800 கிராம், 25 கிலோ தொழு உரத்துடன் கலந்து விதைப்பதற்கு முன் இட வேண்டும்.

தரமான விதைகளை விதைக்க 24 மணி நேரத்திற்கு முன் மருந்து கலந்து விதைத்தால் அழுகல் நோய் தாக்குதலை தவிர்க்கலாம். விதைத்த பிறகு 5 கிலோ மணிலா நுண்ணுரத்தை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். இதனால் பயிருக்கு நுண்ணுட்ட சத்துக்கள் கிடைத்து செடிகள் நன்கு வளரும். தற்போது சாரம், வெள்ளிமேடு பேட்டை வேளாண்மை விரிவாக்க மையங்களில் எண்ணெய்வித்து அபிவிருத்தி திட்டத்தில் நுண்ணுயிர் உரங்கள், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் ஜிப்சம், விதை கிராம திட்டத்தில் மணிலா விதைகள் மானிய விலையில் கிடைக்கின்றன. விவசாயிகள் பெற்று பயன் பெறலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் ராஜசேகர் தெரிவித்துள்ளார்.

**வாழை இலை விலை திடீர் ஏற்றம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2011,02:04 IST

மதுரை : காற்று வீசத்தொடங்கியுள்ளதால், வாழை இலை விலை திடீர் ஏற்றம் கண்டுள்ளது. ஒரு கட்டு இலை 350 முதல் 400 ரூபாய்க்கு விற்ற நிலை மாறி, 450 முதல் 600 ரூபாய் ஆக உயர்ந்துள்ளது. வரத்து குறைந்துள்ளதால், ஓட்டல்களுக்கான இலை சப்ளையில் கிராக்கி எழுந்துள்ளது. மதுரை சென்ட்ரல் மார்க்கெட் இலை வியாபாரிகள் சங்க தலைவர் முருகன் கூறியதாவது: காற்று வீசத்தொடங்கியுள்ளதால், கடந்து இரு நாட்களாக வாழை இலை விலை ஏற்றம் கண்டுள்ளது. எதிர்பாராத விலை ஏற்றத்தால், கிராக்கி ஏற்பட்டுள்ளது, என்றார்.

**பாசிப் பயறு விற்பனை செய்ய கலெக்டர் அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2011,01:26 IST

நாமக்கல் : "விவசாயிகள் உற்பத்தி செய்த பாசிப் பயறை, நாமக்கல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்து பயன்பெறலாம்' என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில், சாகுபடி செய்யப்பட்ட பாசிப்பயறு அறுவடை செய்யப்பட்டு வருகிறது. பாசிப்பயறு நல்ல விலைக் கிடைக்க, நாமக்கல் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், பாசிப்பயறு தரம்பிரிக்கப்பட்டு, ஏல முறையில் விற்பனை செய்யப்படும். அதனால், உள்ளூர் சந்தையை விட, விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உழவர் நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, 1,000 கிலோ அல்லது 5,000 ரூபாய் மதிப்பில் விளைபொருள் விற்பனை செய்தால், அவர்கள் காப்பீட்டு திட்டத்தில் உறுப்பினராக சேர்க்கப்படுவர். எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு விசாயிகள் உயிரிழக்க நேரிட்டால், 1 லடசம் ரூபாய் இழப்பீடு தொகை, கை, கால் இழப்பு ஏற்பட்டால், 75 ஆயிரம் ரூபாய் இழப்பீடும் வழங்கப்படும். இழப்பு குறைவாக இருந்தால், அதற்கேற்றவாறு இழப்பீடும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை பாசிப்பயறு ஏல விற்பனை, நாமக்கல் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நடக்கிறது. எனவே, விவசாயிகள் உற்பத்தி செய்த பாசிப்பயறை, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்து பயனடையலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எண்ணெய் வித்துக்கள் தட்டுப்பாடு: விவசாயிகள் அவதி**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,23:41 IST

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் வேளாண் துறையில் போதிய எண்ணெய் வித்துக்கள் இருப்பு இல்லாததால், விவசாயிகள் அவதிக்குள்ளாகியுள்ளனர். இதனால், நடப்பாண்டு மாவட்டத்தில் எண்ணெய் வித்துகளின் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. விவசாயத்தை பிரதானமாககொண்ட தர்மபுரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் பருவமழையின் அளவு குறைவாக உள்ளதால், விவசாயத்துக்கு தேவையான நீர்வளம் இல்லாமல், ஏரி, குளம் போன்ற நீர்நிலைகள் காய்ந்து விடுகிறது. ஏப்ரல்,மே மற்றும் ஜூன் மாதங்களில் அதிக வெப்ப சலனம் ஏற்படுவதால், நிலத்தடி நீர் மட்டம் பல இடங்களில் வெகுவாக குறைந்து விடுகிறது. உணவு பயிர்களை பயிரிட போதிய தண்ணீர் வசதியில்லாமல், எண்ணெய் வித்துக்களை பயிரிட மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில்

நெல், கேழ்வரகு உள்ளிட்ட உணவு தானியங்கள் பயிரிடும் பரப்பை காட்டிலும், மாவட்டத்தில் 17 சதவீதம் கூடுதலான பரப்பில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டுவருகிறது. கடந்த ஆண்டு அதிக அளவு எள், சூரியகாந்தி ஆகிய எண்ணெய் வித்து பயிர்களை சாகுபடி செய்து, விதைகளை பதப்படுத்தி வைத்திருந்ததால், மாவட்டத்தின் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் வேளாண் துறையிடம் எண்ணெய் வித்துக்களுக்காக காத்திருக்காமல், குறிப்பிட்ட பருவத்தில் எண்ணெய் வித்து பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். குறிப்பாக நல்லம்பள்ளி, சாமிசெட்டிப்பட்டி, உழவன்கொட்டாய் பகுதிகளில் நெல், கேழ்வரகு பயிர்களை விட எண்ணெய் வித்துக்கள் 2,300 ஹெக்டேரில் கூடுதலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், மாவட்டத்தில் பரவலாக எண்ணெய் வித்துக்களுக்கு ஆண்டுதோறும் விவசாயிகள் வேளாண் துறையை நம்பியுள்ளனர். மாவட்டத்தில் ஆண்டுதோறும் தேவையான 206 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் தேவையுள்ளது. கடந்த ஆண்டு மொத்த இலக்கான 200 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் போதிய அளவு கிடைத்தது. நடப்பாண்டு, எண்ணெய் வித்துகள் பயிரிடும் பரப்பு நீர் ஆதாரங்களின் பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டு அதிகரித்துள்ளதால், வித்துக்களின் தேவை அதிகரித்துள்ளது.இது குறித்து வட்டார வேளாண் அலுவலர் (வேளாண் வணிகம்) தாம்சன் கூறியதாவது: மாவட்டத்தில் தற்போது, எண்ணெய் வித்துக்கள் அதிகமாக பயிரிடப்படுகிறது. எண்ணெய் வித்துக்களை பொறுத்தவரை விதை சான்று பெறுவது அவசியம். விதை சான்று அலுவலர்கள் சோதனை செய்து வழங்கிய பின்னரே விவசாயிகளுக்கு விதைகள் விநியோகிக்க முடியும். மாவட்டத்தில் எண்ணெய் வித்துக்களின் கூடுதல் தேவை குறித்து விதை சான்று மற்றும் வேளாண் உயரதிகாரிகளுக்கு கருத்துரு அனுப்பபட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள்குறை தீர யோசனை**

பதிவு செய்த நாள் : ஜுலை 06,2011,22:37 IST

ஊட்டி : விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் குறைகளை தெரிவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர்(பொ) ஹால்தொரை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நீலகிரி மாவட்டம் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும் 15 ம் தேதி காலை 10.30 மணிக்கு நீலகிரி மாவட்ட கலெக்டர் தலைமையில் நடக்கிறது.நீலகிரி மாவட்ட விவசாயிகள் விவசாயம் சம்பந்தமான குறைகள் ஏதேனும் இருந்தால் "தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர், தபால்பெட்டி எண்.72, ஊட்டி' என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ புகார்களை தெரிவிக்கலாம். விவசாயிகளின்

பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து விவசாயம் சம்பந்தப்பட்ட மற்றும் நீர்பாசனம், இடுபொருட்கள் உள்ளிட்ட கோரிக்கைகளை மட்டும் மேற்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

## *வரி இல்லாத வகையில் சர்க்கரை இறக்குமதிக்கு ஆகஸ்டு வரை அனுமதி*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*வரியின்றி சர்க்கரை இறக்குமதி செய்வதற்கான காலத்தை மத்திய அரசு ஆகஸ்டு மாதம் வரை நீட்டித்துள்ளது.*
*மத்திய அரசு, 2009–ஆம் ஆண்டின் தொடக்கத்தில், உள்நாட்டில் விலை உயர்வை தடுக்கவும், அளிப்பை அதிகரிக்கவும் வரியில்லாமல் சர்க்கரை இறக்குமதி செய்ய அனுமதி அளித்திருந்தது. அதற்கு முன்பாக 60 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்பட்டு வந்தது. வரியற்ற இறக்குமதிக்கான அனுமதி காலம் 2011 ஜூன் 30–ந் தேதி நிறைவடைந்தது. எனினும் மத்திய நிதி அமைச்சகம் இதற்கான கால அளவை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.*
*நம் நாட்டில் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் சர்க்கரை ஏற்றுமதிக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால் இறக்குமதியை ஊக்குவிப்பதில் அதிக பயன் இல்லை என சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*
*உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் நாடு முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. எனினும் சர்க்கரை பயன்பாட்டில் நம் நாடுதான் முதலிடத்தில் இருந்து வருகிறது. நடப்பு பருவத்தில், (அக்டோபர் – செப்டம்பர்) உள்நாட்டில் சர்க்கரை உற்பத்தி நன்கு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதால் பத்து லட்சம் டன் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.*

## *சமையல் எரிவாயு, மண்எண்ணெய், உரம் மானியத்தை நேரடியாக வழங்க பரிந்துரை*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*சமையல் எரிவாயு, மண்எண்ணெய், உரம் ஆகியவற்றிற்கான மானியத்தை நுகர்வோர்களுக்கு நேரடியாக வழங்க வேண்டும் என தேசிய அடையாள அட்டை ஆணையத்தின் தலைவர் நந்தன் நீல்கனி தலைமையிலான சிறப்பு பணிக்குழு, மத்திய நிதி அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்துள்ளது. இந்த மானியம், தேசிய அடையாள அட்டை எண் வாயிலாக வாடிக்கையாளர்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படும்.*
*ஏழு மாநிலங்களில்...*
*இந்த திட்டத்தை தமிழ்நாடு, அசாம், மகாராஷ்டிரா, அரியானா, டெல்லி, ராஜஸ்தான் மற்றும் ஒரிசா ஆகிய ஏழு மாநிலங்களில் அக்டோபர் மாதத்திலிருந்து சோதனை முறையில் அறிமுகப்படுத்தலாம் என பணிக்குழு பரிந்துரை செய்துள்ளது.*
*நுகர்வோர்களுக்கு நேரடியாக மானியம் வழங்கும் இந்த திட்டத்தை, சமையல் எரிவாயு மற்றும் உரத்தை பொறுத்தமட்டில் மூன்று கட்டங்களிலும், மண்எண்ணெயை பொறுத்தவரை இரண்டு கட்டங்களிலும் படிப்படியாக அறிமுகப்படுத்த வேண்டும் என பணிக்குழு அதன் இடைக்கால ஆய்வு அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.*
*ஒரு குடும்பத்தினர் பயன்படுத்த வேண்டிய சிலிண்டர்களுக்கான உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டதும், தேவைப்படும் சிலிண்டர்களை, விற்பனை நிலையங்களிலிருந்து சந்தை விலையில் வாங்கிக் கொள்ளலாம். அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட சிலிண்டர்களுக்கான மானியத்தை மட்டும், அரசு அவர்கள் வங்கி கணக்கில் செலுத்தும். இந்த திட்டப்படி, வாடிக்கையாளர்கள் சந்தை விலையில் எத்தனை சிலிண்டர்கள் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.*
*பிரணாப் முகர்ஜி*
*சமையல் எரிவாயு, மண்எண்ணெய், உரம் ஆகியவற்றிற்கான மானியங்களை நுகர்வோர்களுக்கு நேரடியாக வழங்குவதால், திருட்டு மற்றும் கடத்தலை கட்டுப்படுத்த முடியும் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.*
*பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் சமையல் எரிவாயு, மண்எண்ணெய், உரம் ஆகியவற்றில் சுமார் 25–30 சதவீதம் கடத்தப்படுவதாக அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் தெரிவிப்பதாக பொருளியல் வல்லுனர் ஒருவர் தெரிவித்தார்.*

தினகரன்

# டீசல் விலை உயர்வு, நெல் வரத்து குறைவால் அரிசி விலை உயர்வு

பதிவு செய்த நாள் 7/7/2011 2:8:43



காரைக்குடி : டீசல் விலை உயர்வு, நெல் வரத்து குறைவு காரணங்களால் அரிசி விலை கிலோவுக்கு 1 ரூபாய் உயர்ந்துள்ளது. காரைக்குடி அருகே புதுவயல் பகுதியில் 145க்கும் மேற்பட்ட நவீன அரிசி ஆலைகள் உள்ளன. தமிழகத்தில் அரிசி விலையை நிர்ணயம் செய்வதில் 2வது இடத்தில் இப்பகுதி உள்ளது. இப்பகுதிக்கு தஞ்சை, ஆவுடையார் கோவில், திருவாடானை, தேவகோட்டை உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து நெல் கொண்டு வரப்படுகிறது. நாள் ஒன்றுக்கு இப்பகுதிக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் மூட்டை வரை நெல் வரத்து இருந்தது. தற்பொழுது நெல்லுக்கு காங்கேயம், திருப்பூர்
ஆகிய பகுதிகளில் அதிக விலை கொடுக்கப்படுகிறது. இப்பகுதி விவசாயிகள் அங்கு சென்று விற்பனை செய்கின்றனர். இதனால் நெல் வரத்து குறைந்துள்ளது. கர்நாடகா மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்படும் நெல் ரகங்களும் வரத்து குறைந்துவிட்டது. தற்பொழுது டீலக்ஸ் ரக நெல் மட்டுமே இப்பகுதி அதிக அளவில் வருகின்றது.இப்பகுதிக்கு அதிக அளவில் வரத்து உள்ள ரகங்களான அதிசய பொன்னி, சி.ஆர், ஐ.ஆர். 20, கல்சர் போன்ற ரக நெல்களின் வரத்து குறைந்து உள்ளது எனவும், டீசல் விலை உயர்வு காரணமாக லாரி வாடகை உயர்ந்துள்ளதால் அரிசி விலை கிலோவுக்கு ஸி1 உயர்ந்துள்ளது என தெரிவித்துள்ளனர். டீலக்ஸ் (முதல் ரகம்) கடந்த மாதம் 100 கிலோ ஸி2,400, இந்த மாதம் 100 கிலோ ஸி2,500க்கும் விற்பனை செய்யப்படுகிறது. டீலக்ஸ் (இரண்டாம் ரகம்)
ஸி2,350க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்பொழுது ஸி2,400க்கு விற்பனை செய்யப்படுகிறது.